**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்.**

முன்னிலை – **சி.ப. முல்லை வாணன், B.A.B.L.(Hons).,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிபதி

***2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் திங்கட்கிழமை***

*திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09 ஆம் தேதி*

**ஆண்டுப்படிக்கை வழக்கு எண்.698/2023**

(TNCG10-005547-2023)

குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106 ன் மற்றும் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் சுற்றறிக்கை ஆர்.ஓ.சி.எண்.814/2021/ஆர்ஜி/ஜி1 தேதி 07.04.2021 படி கீழ்கண்ட அட்டவணை இணைக்கப்படுகிறது.

| **எண்** | **வழக்கின் விபரம்** | | |
|---|---|---|---|
| 01 | காவல் நிலையத்தின் பெயர் | – | குரோம்பேட்டை காவல் நிலையம் |
| 02 | காவல் நிலைய குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் | – | குற்ற எண்.386/2009<br>இதச பிரிவுகள் 507,506(ii) |
| 03 | குற்றஞ்சாட்டப்பட்டவர் பெயர் மற்றும் இருப்பிடம் பற்றிய விபரங்கள் | – | ஜெகநாத்,வ.25<br>த/பெ ஜெயராமன்<br>எண்.15/6, மங்கேஷ் தெரு,<br>தியாகராய நகர், சென்னை-17. |
| 04 | குற்ற நிகழ்வு நாள் | – | 25.07.2009 |
| 05 | முறையீடு மற்றும் வழக்கு கோப்பில் எடுத்த நாள் | – | 17.09.2010 |
| 06 | குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நாள் | – | மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 07 | குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | – | மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 08 | குற்றஞ்சாட்டப்பட்டவர் | – | மாண்புமிகு மெட்ராஸ் உயர் |

| | | | |
|---|---|---|---|
| | பிணையின் பேரில் விடுவிக்கப்பட்ட நாள் | | நீதிமன்றத்தில் கு.அ.ம.எண்.19176/2009 தேதி 16.09.2009 முன் பிணை பெற்றதால் எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 09 | இவ்வழக்கு மேல் நடவடிக்கை குறித்து மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பிய நாள் | – | எழவில்லை |
| 10 | ஒப்படைத்தல்/ அனுப்பிவைத்தல் | – | எழவில்லை |
| 11 | குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | – | 10.01.2014 |
| 12 | கு.வி.மு.ச பிரிவு 240 கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 06.01.2015 |
| 13 | கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழான மனுவை தவிர பிற மனுக்களின் விபரம் | | கு.வி.மு.ச பிரிவு 311 சாட்சிகளை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய கு.ப.ம.எண்.9040/2015, நாள் – 3.11.2015 அம்மனு அனுமதிக்கப்பட்டது.<br>கு.வி.மு.ச பிரிவு 311 சாட்சிகளை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய கு.ப.ம.எண்.633/2016, நாள் – 02.02.2016, அம்மது அனுமதிக்கப்பட்டது. |
| 14 | அரசுதரப்பு சாட்சிகளிடம் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த | – | |

| அ.சா. | மு.வி. | கு.வி. |
|---|---|---|
| அ.சா.1 | 28.07.2015 | 24.01.2017, 12.09.2024, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் | | அ.சா.2 | 28.07.2015 | – |
| | | | அ.சா.3 | 28.07.2015 | – |
| | | | அ.சா.4 | 01.09.2015 | – |
| | | | அ.சா.5 | 06.10.2015 | – |
| | | | அ.சா.6 | 25.06.2025 | 25.06.2025 |
| | | | அ.சா.7 | 16.07.2015 | 16.07.2025 |
| 15 | கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ)ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் கேள்வி வினவப்பட்ட நாள் | – | 24.07.2025 | | |
| 16 | குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமறைவு எதிரி மற்றும் தலைமறைவு எதிரிகள் ஆஜரான விபரம் | – | இல்லை | | |
| 17 | மேலமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடை ஆணை மற்றும் முடிவுகள் | – | இல்லை | | |
| 18 | விசாரணை முடிவுற்ற நாள் | – | 23.03.2026 | | |
| 19 | தண்டனை அல்லது தீர்ப்பு பகரப்பட்ட நாள் | | 23.03.2026 | | |
| 20 | தீர்ப்பு நகலை வழங்குதல் / குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான முடிவு | | எதிரிக்கு எதிரான இதச பிரிவு 507, 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரி விடுதலை | | |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டார். |
| 21 | காலதாமதத்திற்கான விளக்கம் | | சாட்சிகள் ஆஜர்படுத்த காலதாமதம் ஆனதால், வழக்கை முடிக்க காலதாமதம் ஏற்பட்டது. |

இவ்வழக்கானது மாண்பமை தாம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1–ல் ஆ.வ.எண்.863/2010 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு மாண்பமை செங்கல்பட்டு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற டி.எண். 8101/2022, நாள் 04.11.2022 தேதி உத்தரவின் படி மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு ஆ.வ.எண்.698/2023 என கடந்த 23.06.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்குரைஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.R.N.கணேஷ், M.S.A.சித்திக் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் –**

01) அரசு தரப்பு வழக்கானது நிகழ்நிலை புகார்தாரரும், எதிரியும் நெருங்கிய உறவினர்கள் என்றும், எதிரியும், நிகழ்நிலை புகார்தாரரின் அண்ணனுக்கு மைத்துனர் என்றும், எதிரியின் அக்கா நித்யாவை நிகழ்நிலை புகார்தாரரின் அண்ணன் மெய்யநாதன் என்பவர் திருமணம் செய்துள்ளார் என்றும், மெய்யநாதனின் தங்கையும், நிகழ்நிலை புகார்தாரரும் ஆகிய தேன்மொழியை எதிரியின் அண்ணன் திருமணம் செய்துள்ளார் என்றும், நிகழ்நிலை புகார்தாரின் அண்ணன் மெய்யநாதனுக்கும் அவரது மனைவி நித்யாவுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நித்யா பிரிந்து தனியாக வாழ்ந்து வருகிறார் என்றும்,

இருவரும் விவாகரத்து கேட்டு குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது என்றும், மேலும் எதிரியானவர் தன் அக்கா நித்யாவின் வாழ்க்கை பாதிக்கப்பட்டதற்கு காரணமாக இருக்கும் மெய்யநாதனின் தங்கை தேன்மொழியின் வாழ்க்கையை கலங்கப்படுத்தி சீர்குலைக்க வேண்டும் என்ற காழ்ப்புணர்ச்சியுடன், நிகழ்நிலை புகார்தாரர் தேன்மொழிக்கும் அவரது உடன் பிறந்த அண்ணன் மெய்யநாதனுக்கு கள்ளத்தொடர்பு இருப்பதாக வேண்டுமென்றே நிகழ்நிலை புகார்தாரின் வாழ்க்கையை சீரழிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு பெண்மையை கலங்கப்படுத்தி கலாச்சாரத்தை கேவலப்படுத்தியும் நிகழ்நிலை புகார்தாரிடம் தொலைபேசிமூலமாகவும், நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் கேவலப்படுத்தியும் கொலை மிரட்டல் செய்துள்ளார் என்றும் மேற்படி எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 507,506(2) ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குரோம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள் 507, 506(2) கீழ் குற்ற எண்.386/2009 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்பு வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரி மீது இதச பிரிவுகள் 507, 506(2)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

02) எதிரி மாண்பமைமெட்ராஸ் உயர் நீதிமன்றம், கு.அ.ம.எண் 19176/2009, தேதி 16.09.2009 ன் படி முன் பிணை பெற்று பிணையில் இருந்து வருகிறார்.

03) குற்ற இறுதியறிக்கை பரிசீலனைக்குப் பின் எதிரிக்கு எதிராக மேற்படி வழக்கு எண்ணில் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் படி வழங்கப்பட்டும், போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும். வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனைய முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவுசெய்து கு.வி.மு.ச பிரிவு 240–ன் படி, எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 507, 506(2) ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டுகள் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து, வழக்கு விசாரணையை எதிர் கொள்வதாக கூறி, வழக்கு விசாரணைக்கு வேண்டினார். அதனால், அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய இந்நீதிமன்றம் அரசு தரப்பு

சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது.

04) இந்நிலையில் இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 4 வரையான சான்றாவணங்கள் புகார் அ.சா.ஆ.1,அவதூறாக அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.2, திருமண அழைப்பிதழ் அ.சா.ஆ 3, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. மற்ற சாட்சிகள் விசாரிக்கப்படாமல் அரசுதரப்பில் நீக்கறவு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

05) **அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் –**

5.1) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி1 தேன்மொழி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர். அவர் தனது சாட்சியத்தில் தான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் ஆஜர் எதிரி தனது அண்ணி நித்தியாவின் தம்பி ஆவார் என்றும், தன்னுடைய அண்ணன் டாக்டர் மெய்யநாதன் என்பவருக்கும் ஆஜர் எதிரி அக்காவிற்கும் 06.07.2008 அன்று திருமணம் நடந்தது என்றும் அவர்கள் இருவருக்கும் விவாகரத்து வரை சென்று விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்நிலையில் எதிரி ஜகனாதன் தன்னுடைய மாமனார், மாமியாருக்கு 23.07.2009 அன்று பதிவு தபால் மூலம் ஒரு கடிதம் அனுப்பினார் என்றும், அதை தனது மாமனார் தன்னிடம் காண்பித்தார் என்றும், அந்த கடிதத்தில் தனக்கும் தன் அண்ணனுக்கும் தவறான உறவு இருந்தது என்றும், தான் மோசமானவள் என்றும் தன்னை நிம்மதியாக வாழ விட மாட்டேன் என்றும், மேலும் தன் முகத்தில் ஆசிட் ஊற்றி கொலை செய்து விடுவேன் என்றும், அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது என்றும் 65 பக்கம் போல் புக்லெட் மாதிரி அனுப்பி இருந்தார் என்றும், மேலும் அந்த கடிதத்தில் சொல்ல முடியாத வார்த்தைகளால் காதால் கேட்க முடியாத வார்த்தைகளால் தன்னையும் தன் அம்மாவையும் கொச்சைப்படுத்தும் விதமாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், அதன் பிறகு எதிரி பல்வேறு எண்களில் இருந்து உன்னை வாழ விடமாட்டேன் என்றும், உன் வாழ்க்கையை அழித்து விடுவேன் என்று போன் மூலம் மிரட்டி வந்தார் என்றும், இந்த மிரட்டல் 2 வாரமாக வந்து கொண்டு இருந்தது என்றும், அந்த மிரட்டலுக்கு பயந்து காவலுக்கு சென்று புகார் கொடுத்தேன் என்றும், தான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகவும், எதிரி தன் மாமனார் வீட்டிற்கு தன்னை பற்றி அவதூறாக அனுப்பிய கடிதம்

அ.சா.ஆ.2 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.2) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி2 மெய்யநாதன் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர் என்றும், அ.சா.1 தேன்மொழி தனது தங்கை என்றும், எதிரி ஜெகந்நாதன் தனது மனைவியின் தம்பி ஆவார் என்றும் தனக்கும் தனது மனைவி நித்தியாவிற்கும் 06.07.2008 ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றும் தான் பிரைவேட் அம்பத்துார் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன் என்றும், தனக்கும் தனது மனைவி நித்தியாவிற்கும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது என்றும், அந்த கருத்து வேறுபாட்டால் தான் விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், எதிரி தனது தங்கை வாழும் இடமான குரோம்பேட்டையில் அவர் மாமனார் மாமியாருடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வருகிறார் என்றும், சம்பந்தமில்லாமல் தனது தங்கை வாழ்க்கையை சீர்குலைக்கும் விதமாக எதிரி தன் தங்கையின் மாமனார் வீட்டிற்கு ஒரு கடிதம் வந்ததாக தனது தங்கை போன் மூலம் தகவல் சொன்னார் என்றும், தான் தனது தங்கைக்கு அதை பற்றி கவலை பட வேண்டாம் விவாகரத்து வழக்கு எதிரியின் அக்காவிற்கு விவாகரத்து இருப்பதால் அதை பெரிதுபடுத்த வேண்டாம் கொஞ்சம் விட்டு பிடி என்று தனது தங்கையிடம் கூறினேன் என்றும், எதிரி ஜெகந்நாதன் அந்த கடிதத்தில் தனக்கும் தனது தங்கை தனது தாய் தவறான உறவு இருப்பதாக எழுதி இருந்தார் என்றும், மேலும் தன்னை அசிங்கப்படுத்தும் விதமான தான் வேலை செய்யும் இடமான திருவள்ளுவர் மாவட்டம் உளுந்தையில் ஆரம்ப சுகாதார மையத்திற்கும் அதே கடிதத்தை தனக்கு தனது அலுவலக முகவரிக்கு ஒரு நகல் தனது பெயருக்கு அனுப்பி வைத்தார் என்றும், மேலும் ஆஜர் எதிரி பல்வேறு எண்களிலிருந்து தொடர்ந்து தொலைபேசி மூலம் தொந்தரவு கொடுத்திருந்தார் என்றும், மேலும் போனில் தன் தங்கையின் மீது ஆசிட் ஊற்றி விடுவேன் என்றும், ஆசிட் ஊற்றி விட்டால் நீ வெளியில் எங்கும் வர முடியாது என்றும், தொடர்ந்து மிரட்டல் விடுத்துள்ளார் என்றும், அந்த மிரட்டல் தொடர்ந்து வரவே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், தனக்கும் தனது மனைவி நித்யாவிற்கும் இடையே நடைபெற்ற திருமண அழைப்பிதழ் அ.சா.ஆ.3 என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.3) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி3 ஜெயந்தி என்பவர் அ.சா.3 ஆக

விசாரிக்கப்பட்டுள்ளர் என்றும், தனது மகனுக்கும் தனது மருமகளான நித்தியாவிற்கும் 06.07.2008 ம் வருடம் திருமணம் நடந்தது என்றும், தன்னுடைய மகள் தேன்மொழி தான் குடியிருக்கும் வீட்டிற்கு வரும்போது தன் மகன் மெய்யநாதனுக்கு போன் செய்து வர சொல்வேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி தன் மகளையும் தன் மகனையும் ஒரு ரூமில் பேச வைத்து அழகு பார்க்கிறாயா என்று என்னிடம் கேட்டார் என்றும், தன்னுடைய மகன் தன் கணவர் இறந்ததால் தனக்கு பணம் கொடுப்பார் என்றும், அதற்கு ஆஜர் எதிரி உனக்கும் மெய்யநாதனுக்கு என்ன உறவு உனக்கு ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்றும் போனில் கூறினார் என்றும், இதே மாதிரி பணம் வாங்கி கொண்டு இருந்தார் உன்னை ஆளை வைத்து கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்றும், தன்னுடைய மகள் தற்போது அண்ணா நகரில் குடியிருந்து செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்றும், தன்னுடைய மகள் தற்போது அண்ணா நகரில் குடியிருந்து வருகிறார் என்றும், இந்த வழக்கு சமயத்தில் தன் மகள் அவருடைய மாமனார் மாமியார் குடியிருப்பு வீடான குரோம்பேட்டையில் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தாள் என்றும், இந்த சமயத்தில் ஜெகநாதன் ஏன்பவர் தனது மகள் மாமனார் வீட்டிற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார் என்றும், அந்த கடிதத்தை பற்றி விசாரிக்க தன் மகள் மாமனார் மாமியார் அழைத்தார்கள் என்றும் அந்த கடிதத்தை பெரிது படுத்த வேண்டாம் என்றும், ஏதோ கோபத்தில் போட்டுள்ளார் என்று கூறினேன் என்றும், தன் மகளுக்கும் மாமனார் மாமியார் இடையே இந்த கடிதத்தால் பிரச்சனை ஏற்பட்டது என்றும், இதனால் தன் மகள் தனி குடித்தனம் செல்ல வேண்டியிருந்தது என்றும், அந்த கடிதத்தில் சொல்ல முடியாத அளவிற்கு ரொம்ப கொச்சையாக எழுதப்பட்டிருந்தது என்றும், தற்போது அந்த வார்த்தையை என்னால் சொல்ல முடியவில்லை என்றும், மேலும் தொடர்ந்து தன் மகளை ஜெகநாதன் போன் மூலமாக மிரட்டல் விடுத்தார் என்றும், தன் அக்காவிடம் இருந்தும் அவர் கணவரிடமிருந்து பணம் வாங்க கூடாது அப்படி வாங்கினால் உன்னை அசிங்கப்படுத்துவேன் என்று மிரட்டி கொண்டிருந்தார் என்றும், இதனால் தனது மருமகன் செழியன் எங்கள் வீட்டிற்கு அருகிலேயே இருக்கும்படி கூறினார் என்றும், இவர்களுக்கு பயந்து நானும் குடியிருந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கு விசயமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.4) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி4 ஜானகிராமன் என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர் என்றும், அவர் தனது சாட்சியத்தில் தேன்மொழியை தனக்கு தெரியும் என்றும் அவர் தனது பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றும், எதிரி ஜெகநாதன் சாட்சி 1ன் தேன்மொழியின் அண்ணனின் மைத்துனர் ஆவார் என்றும், சாட்சி1 தேன்மொழி மருத்துவராக இருப்பதால் தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போகும்போது சாட்சி தேன்மொழியின் அண்ணனின் மைத்துனர் ஜெகநாதன் எனக்கு அதிகமாக டார்ச்சர் கொடுத்து வருகிறார் என்றும், தேன்மொழி அண்ணன் ஜெகநாதனுக்கும் அவரது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டு தற்போது பிரிந்துள்ளதால் அதை வைத்து கொண்டு சாட்சி தேன்மொழியை அடிக்கடி டார்ச்சர் செய்து வருவதாக என்னிடம் கூறினார் என்றும், மேலும் எதிரி தேன்மொழியின் மாமனாருக்கு தேன்மொழியை பற்றி அவதூறான கடிதங்கள் எழுதியும் போன் மூலம் அவதூறாக வார்த்தைகள் சொல்லி திட்டியதாகவும், அடிக்கடி தொல்லை கொடுத்து வந்ததாக என்னிடம் கூறினார் என்றும், எதிரி தேன்மொழியின் மாமனாருக்கு கடிதம் போட்டதினாலோ அல்லது அவரது மன வேதனையினாலோ தற்போது குரோம்பேட்டையிலிருந்து காலி பண்ணி அண்ணா நகருக்கு சென்று விட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.5) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி5 மோசஸ் என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர் என்றும், அவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 தேன்மொழியை எனக்குத் தெரியும் என்றும், எதிரி ஜெகநாதன் டாக்டர் மெய்யநாதன் என்பவருடைய மைத்துனர் ஆவார் என்றும், ஜெகநாதனையும் எனக்கு தெரியும் என்றும் எனக்கு சாட்சி 2 மெய்யநாதன் என்பவர் மிகவும் நெருக்கமான நண்பர் ஆவார் என்றும், தான் டாக்டர் மெய்யநாதனை அடிக்கடி பார்க்க செல்வேன் என்றும், அப்போது அவரது தங்கை தேன்மொழி, ஜெகநாதன் என்பவர் அடிக்கடி தொல்லை தருவதாகவும், தன் மீது ஆசிட் ஊற்றி விடுவதாகவும் சொல்லி அழுவார் தானும் அப்போது அவருக்கு சமாதானம் சொன்னேன் என்றும், இருதரப்பினருக்கிடையே சமரசம் செய்து வைத்தேன் என்றும், அதன் பிறகும் தேன்மொழி என்பவர் அவரது மாமனார் வீடான குரோம்பேட்டையில் வசிக்கும் போது ஜெகநாதன் என்பவர் தேன்மொழிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார் என்றும், அதே மாதிரி டாக்டர் மெய்யநாதனுக்கும் எழுதி அனுப்பினார் என்றும், அப்போது டாக்டர் மெய்யநாதன் உளந்தையில் டாக்டராக பணியாற்றி கொண்டிருந்தார் என்றும், ஜெகநாதன் என்பவர்

தேன்மொழிக்கும் மெய்யநாதனுக்கும் எழுதிய கடிதத்தை தான் படித்து பார்த்தேன் என்றும், அந்த கடிதத்தில் மெய்யநாதன் தேன்மொழி மற்றும் அவரது தாயாரையும் மெய்யநாதனையும் இணைத்து தவறாக கொச்சைபடுத்தும் விதமாக எழுதப்பட்டிருந்ததை தான் படித்து பார்த்தேன் என்றும், அந்த கடிதம் போஸ்டலில் வந்த கவரையும் தான் பார்த்தேன் என்றும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அந்த கடிதம் தான் அனுப்பப்பட்ட கடிதம் அது சுமார் 32 பக்கங்கள் இருக்கும் என்றும் அதன் பிறகு இந்த கடிதம் அனுப்பப்பட்ட போது தேன்மொழி மாமனார் தற்போது முகப்பேரில் குடியிருந்து வருகிறார் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தேன்மொழி புகார் கொடுத்தார் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.6) இவ்வழக்கின் பட்டியல் சாட்சி6 லட்சுமி நாராயணன் என்பவர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளர் என்றும், தான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆணையாளராக பணியாற்றி 31.7.2015 அன்று பணி ஓய்வு பெற்று விட்டேன் என்றும், கடந்த 04.09.2009 அன்று குரோம்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது புகார்தாரர் மருத்துவர் தேன்மொழி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.386/2009 சட்டப்பிரிவு 507,506(2) இ.த.ச. கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றும், புகார் மனு அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், அதன் பின்னிட்டு நான் பணி மாறுதல் காரணமாக வேறு காவல் நிலையத்திற்கு பணி மாற்றம் செய்யப்பட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5.7)இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி உதவி ஆணையாளர் திரு.சந்திரசேகரன் என்பவர் அ.சா.7 ஆக விசாரிக்கப்பபட்டுள்ளார், தான் கடந்த 2024ம் ஆண்டு தாம்பரம் மத்திய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆணையாளராக பணியாற்றி பணி நிறைவு பெற்று விட்டேன் என்றும், கடந்த 2009ம் ஆண்டு குரோம்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது எனக்கு முன்னர் காவல் ஆய்வாளர் லஷ்மி நாராயணன் அவர்கள் தேன்மொழி அளித்த புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.386/2009ல் சட்டப்பிரிவு 507,506(2) இ.த.ச. கீழ் ஜெகந்நாதன் என்பவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து தொடர் விசாரணைக்கு எனது பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், தான் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு புகார்தாரர் மருத்துவர் தேன்மொழி மற்ற

சாட்சிகளான மருத்துவர் மெய்யநாதன், பெரியசாமி, ஜெயந்தி, ஜானகிராமன், மோசஸ், சதீஷ் மனோகரன் ஆகியோரிடத்தில் தனித்தனியாக விசாரணை செய்து புகார்தாரரின் வாழ்க்கையை கடன் கொடுத்ததற்காக எதிரி காழ்ப்புணர்ச்சியுடன் புகார்தாரருக்கு கள்ளத்தொடர்பு இருப்பதாக பொய்யான தகவலை பரப்பி கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக அளித்த சங்கதிகளை வாக்குமூலமாக பதிவு செய்தேன் என்றும், மேலும் புகார்தாரரிடம் இவ்வழக்கு தொடர்பாக ஆவணங்களை பெற்று இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி ஜெகந்நாத் என்பவரை கைது செய்த தேடி வரப்பட்ட நிலையில் 16.9.2009 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணைவு பெற்று பிணையில் சென்றார் என்றும், இவ்வழக்கின் இறுதி விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக மேற்படி சட்டப்பிரிவின் கீழ் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார் என்றும் இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

06) அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியப் பகுதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1) (பி) ன் படி விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வுக்குரிய பிரச்சனை –</u>**

07) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களிலிருந்தும், இருதரப்பு வாதங்களிலிருந்தும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலிருந்தும், தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இதச பிரிவுகள் 507, 506(2) கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

08) கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், கடந்த 23.07.2009 ம் தேதி எதிரி அ.சா.1 யை பெண்மையை இழிவுபடுத்தும் வகையில் சொல்ல முடியாத வார்த்தைகளால் திட்டியும், ஆசீட் ஊற்றி கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும்,

அ.சா.2 க்கு தான் வேலை செய்யும் அலுவகத்திற்கு அசிங்கப்படுத்தும் விதமாக கடிதம் அனுப்பியதாகவும், பல்வேறு எண்களிலிருந்து தொலைபேசி மூலம் தொந்தரவு கொடுத்ததாகவும் அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு உரிய தண்டணை வழுங்கபடவேண்டும் என வாதிட்டார்.

09) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1, மற்றும் அ.சா.7 சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>தீர்வு –</u>**

10) இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் கடந்த 04.09.2009 அன்று இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 திருமதி.தேன்மொழி என்பவர் இவ்வழக்கின் எதிரியான ஜெகநாத் என்பவர் பெண்மையை இழிவுபடுத்தும் வகையில் சொல்ல முடியாத வார்த்தைகளால் திட்டியும், ஆசீட் ஊற்றி கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக அ.சா.1 புகார் மனு கொடுத்துள்ளார் என அறியமுடியகிறது. அந்த புகாரின் அடிப்படையில் அ.சா.6 திரு.லட்சுமி நாராயணயன் புகாரை பெற்று அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் பின்னிட்டு புலன் விசாரணை அதிகாரி அ.சா.7 திரு. சந்திரசேகரன், இவ்வழக்கின் சாட்சிகளான அ.சா.1 தேன்மொழி, அசா.2 மெய்யாநாதன், சாட்சி பெரியசாமி, அ.சா.3 ஜெயந்தி, அசா.4 ஜானகிராமன், அ.சா.5 மோசஸ் ஆகியோர்களை விசாரணை செய்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச.507, 506 (2)ன் சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என அறியமுடிகிறது.

11) இவ்வழக்கில் எதிரியானவர் அ.சா.2 மெய்யநாதன் என்பவரின் மைத்துனர் மற்றும் அ.சா.1 தேன்மொழி என்பவர் அ.சா.2 ன் உடன் பிறந்த தங்கை மற்றும் அ.சா.3 ஜெயந்தி என்பவர் அ.சா.2 ன் தாயார் ஆவார். மேற்படி உறவுமுறையானது எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாகும். மேலும் அ.சா.2 மெய்யநாதன் என்பவருக்கும் எதிரியின் உடன் பிறந்த சகோதிரி நித்யா என்பவருக்கும் கடந்த 06.07.2008 அன்று திருமணம் நடைபெற்றது என எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட

பொருண்மையாகும். மேலும் அசா.ஆ.3 ஆவணமான திருமண அழைப்பிதழ் ஆனாது நித்யா மற்றும் அ.சா.2 மெய்யநாதன் ஆகியோருக்கு 06.07.2008 அன்று திருமணம் நடைபெற்று உள்ளது என நிரூபணம் ஆகிறது.

12) இவ்வழக்கின் அ.சா.1, அ.சா.2, அசா.3 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் இவ்வழக்கின் எதிரி ஜெகநாத் என்பவர் அ.சா.2 ன் தங்கையான அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் தாயாரான அசா.3 ஆகிய இரண்டு பெண்களை அசா.2 உடன் தவறான தொடர்பில் இருப்பதாக குறிப்பிட்டு அ.சா.1 ன் மாமனார் ஜெயபால் மற்றும் மாமியார் இந்துமதி மற்றும் உறவினர்கள் மற்றும் அசா.2 ஆகியோருக்கு தபால் மூலமாக கடிதம் அனுப்பி உள்ளார் என்றும் மேலும் எதிரி ஜெகநாத் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருக்கு போன் செய்து கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரிக்கு எதிராக அரசு தரப்பிற்கு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

13) இவ்வழக்கின் அ.சா.4 ஜானகிராமன் அ.சா.5 மோசஸ் ஆகியோர் வழக்கு சம்பவம் தொடர்பாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களுக்கு வழக்கு சம்பவம் நடைபெற்றது தொடர்பாக தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் வழக்கு சம்பவம் தொடர்பாக தெரியும் என சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.4 மற்றும் அசா.5 ஆகியோரின் சாட்சியமானது வழக்கு சம்பவம் தொடர்பாக கேள்வி நிலை சாட்சிகளாவார்கள் மேற்படி அ.சா.4 மற்றும் 5 ஆகியோரின் கேள்வி நிலை சாட்சியமானது அரசு தரப்பு வழக்கு உறுதிப்படுத்தும் வகையில் எவ்வித முக்கியத்துவமும் பெறவில்லை. இவ்வழக்கில் அ.சா.6 புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றி சாட்சியம் அளித்தள்ளார் மற்றும் அ.சா.7 இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.6 மற்றும் 7 ஆகியோரின் சாட்சியமானது இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது அரசு பணியை செய்யும்போது சொன்ன சாட்சியமாக கருத முடியும்

14) இவ்வழக்கில் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இவ்வழக்கில் புகார் மனு ஒரு மாதங்களுக்கு மேல் கால தாமதமாக கொடுக்கப்பட்டது என்றும் அந்த கால தாமத்திற்கு உண்டான காரணத்தை அரசு தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை என்றும் எனவே மேற்படி புகார் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என வாதிட்டார். வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அ.சா.1 புகார் மனுவில் எதிரி அனுப்பியதாக சொல்லப்படும் கடிதம் 25.07.2009 அன்று

அனுப்பி உள்ளார் என்றும் அதன் பின்னிட்டு அந்த கடிதம் தொடர்பாக புகார் மனு 04.09.2009 அன்று கொடுக்கப்பட்டுள்ளது என அறியமுடியகிறது. ஆக 25.07.2009 அன்று நடைப்பெற்றதாக சொல்லப்படும் சம்பவம் தொடர்பாக 04.09.2009 அன்று அ.சா.1 புகார் மனு கொடுத்துள்ளார் என அறியமுடியகிறது. அந்த புகார் மனுவானது 40 நாட்கள் கால தாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என அறியமுடிகிறது அதனை அ.சா.1 தனது குறுக்கு விசாரணையிலும் 1 1/2 மாதம் கழித்து தான் புகார் மனுவை கொடுத்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

15) மேற்படி புகார் மனுவானது 40 நாட்கள் காலதாமமாக கொடுக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி புகார் மனு காலதாமதமாக கொடுக்கப்பட்டது தொடர்பான காரணத்தை புகாரில் குறிப்பிடவில்லை அதனை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே இவ்வழக்கின் புகார் மனு அ.சா.ஆ 1 வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் இருந்து 40 நாட்கள் கால தாமதமாக கொடுக்கப்பட்டுள்ளநிலையில் மேற்படி காலதாமம் தொடர்பாக நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 காலதாமத்திற்கு உண்டான எவ்வித காரணத்தை புகாரில் குறிப்பிடாத நிலையில் மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பவமானது உண்மையில் நடைபெற்று உள்ளாத என சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

16) மேலும் அ.சா.1 தனது புகாரில் எதிரி ஜெகநாத் என்பவர் கைப்பட கடிதம் எழுதி அனுப்பியதாக குறிப்பிட்ட நிலையில் இவ்வழக்கில் தாக்கல் செய்த அ.சா.ஆ 2 கடிதமானது தட்டச்சு செய்யப்பட்டுள்ள கடிதம் ஆகும். மேலும் புகாரில் 25.07.2009 அன்று தேதியிட்ட கடிதம் என குறிப்பிட்ட நிலையில் அசா.ஆ 2 கடிதமானது 18.07.2009 தேதியிட்ட கடிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 2 கடிதமானது தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடிதமானது 25.07.2009 அன்று எழுதப்பட்டது என்று என்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றம் ஆனால் அந்த கடிதத்தில் 18.07.2009 தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் " மேற்படி அ.சா.1 தனது குறுக்கு விசாரணியில் தான் கொடுத்த புகார் மனுவின் சங்கதிகளை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்காமல் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் புகாரில் எதிரி கைப்பட கடிதம் எழுதி அனுப்பினார் என்றும் ஆனால் இவ்வழக்கில் தாக்கல் செய்த எதிரி அனுப்பியதாக சொல்லப்படும் கடிதமானது தட்டச்சு செய்து அனுப்பப்பட்டுள்ள நிலையில் மேற்படி புகார்

மனுவில் உறுதிப்படுத்தும் வகையில் அசா.ஆ.2 சான்று ஆவணம் அமையாத நிலையில் உண்மையில் எதிரி அ.சா.ஆ.2 ஆவணத்தை அனுப்பி உள்ளாரா என்று சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

17) மேலும் இவ்வழக்கில் எதிரி அனுப்பியதாக சொல்லப்படும் கடித்தின் அசலை கைப்பற்றி அரசு தரப்பில் வழக்கு ஆவணமாக தாக்கல் செய்து குறியீடு செய்யப்படவில்லை. மற்றும் எதிரி அனுப்பியதாக சொல்லப்படும் கடிதத்தை பெற்றுக்கொண்டதாக குறிப்பிடும் அ.சா.1ன் மாமனார் ஜெயபால் மற்றும் மாமியார் இந்துமதி ஆகிஙயோரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்து வாக்குமூலம் எதும் பதிவு செய்யவில்லை அதனை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கில் கைப்பட எழுதப்பட்ட கடிதம் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான் என்றும் ஜெயபால் மற்றும் ஜெயந்தி ஆகியோரை இவ்வழக்கில் விசாரணை செய்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றும் மற்றும் ஜெயபால் மற்றும் ஜெயந்தி ஆகியோருக்கு கடிதம் கிடைக்கப்பெற்றத்தற்கான ஆவணங்கள் மற்றும் எதிரி அனுப்பப்பட்டடதாக சொல்லப்படும் கடிதத்தை கைப்பற்ற வில்லை" என ஒப்புக்கொண்டுள்ளார்.

18) ஆகவே இவ்வழக்கில் எதிரி அனுப்பியதாக சொல்லப்படும் கடிதமானது அ.சா.1க்கு நேரடியாக அனுப்பப்படாத நிலையிலும் அதனை அசா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்ட உள்ள நிலையிலும் எதிரி அனுப்பியதாக சொல்லப்படும் கடிதத்தின் அசலையும் அந்த கடிதத்தை பெற்றதாக சொல்லப்படும் ஜெயபால் மற்றும் இந்துமதி ஆகியோரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யாததாலும் மற்றும் அ.சா.2க்கும் எதிரி கடிதம் அனுப்பியதாக சொல்லப்படும் கடிதத்தை கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்து குறியீடு செய்யாத நிலையில் இவ்வழக்கில் தாக்கல் செய்த ஒளி நகல் கடிதம் அ.சா.2 ஆவணமானது உண்மையில் எதிரியால் அனுப்பப்பட்டதா என சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் அ.சா.2ல் ஜெகநாத் என உள்ள கையொப்பம் ஆனாது எதிரியுடைய கையொப்பம் என நிருபணம் செய்ய அரசு தரப்பில் அந்த கையொப்பத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை ஏதும் பெற்று தாக்கல் செய்யாத நிலையில் மேற்படி அ.சா.ஆ.2 ஆவணமானது உண்மையில் எதிரியால் அனுப்பப்பட்டதா என சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

19) இவ்வழக்கில் அ.சா.1, அசா,2, அசா.3 ஆகியோர் எதிரி தங்களுக்கு அலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு கொலை மிரட்டல்

விடுத்ததாக சொல்லி உள்ள நிலையில் எதிரி எந்த அலைபேசி எண்ணிலிருந்து எந்த அலைபேசி எண்ணிற்கு எந்த தேதி மாதம் வருடத்தில் தொடர்புக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்தார் என்று சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் கொலை மிரட்டல் விடுத்த அலைபேசி எண் தொடர்பாக சி.டி ஆர் பதிவுகள் பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையிலும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே இவ்வழக்கில் எதிரி அலைபேசி மூலமாக தொடர்புக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்ட நிலையில் எதிரி எப்போது கொலை மிரட்டல் விடுத்தார் என்று சாட்சியம் அளிக்காத நிலையிலும் அந்த கொலை மிரட்டல் ஆனாது எதிரி உடைய அலைபேசி எண்ணில் இருந்து அ.சா.1, 2, 3 ஆகியோரின் எந்த அலைபேசி எண்ணிற்கு அழைப்பு வந்து கொலை மிரட்டல் விடுத்தார் என அந்த அலைபேசி எண்ணிற்கு உண்டான சிடிஆர் பதிவு பெற்று அலைபேசி மூலமாக எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிருபணம் செய்யாத நிலையில் அவ்வாறு கொலை மிரட்டல் விடுத்ததால் தங்களுக்கு உடனடியாக உயிரிழப்பு ஏற்படும் என பயம் ஏற்பட்டதாக மேற்படி சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையிலும் புகாரானது 1 மாதங்களுக்கு மேல் காலதாமதாமக கொடுக்கப்பட்டுள்ள நிலையில் உண்மையில் எதிரி அ.சா.1, அசா,2, அசா.3 ஆகியோருக்கு அலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு கொலை மிரட்டல் விடுத்தாரா என சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள்மூலம் எதிரி மேற்படி நபர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20) அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளின் நீதிமன்ற சாட்சியம், மற்றும் அ.சா.ஆ.1 முதல் 4 வரையிலான இவ்வழக்காவணங்கள் ஆகியவற்றையும் நன்கு பரிசீலனை செய்கையில், மேற்படி சாட்சிகளின் சாட்சியமானது நம்ப தகுந்த வகையில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிருபணம் செய்யும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகவே அரசு தரப்பு எதிரி மீதான வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் நிரூபிக்கத் தவறிவிட்டதாகவே இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

21) எதிரி அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக உரிய சாட்சியங்கள் மூலம் நிருபணம் செய்யாதால் எதிரி

மீதான இதச பிரிவு 506(2), 507–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது

22) ஆகவே, மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கு சம்பவம் உண்மையிலேயே நடைபெற்றதா என்பதும், எதிரி கொலை மிரட்டல் விடுத்தாரா என்பதும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்வதே நீதியின்பால் நியாயமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

23) எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் குற்றம்சாட்டப்பட்ட எதிரி இதச பிரிவுகள் 507, 506(2) ன் கீழ் குற்றவாளி இல்லை என இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

24) இறுதியாக, அரசு தரப்பு எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 507, 506(2)ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரியின் பிணையப்பத்திரம் மேல்முறையீட்டு காலம் வரை அமலில் இருக்கும் எனவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணையபத்திரம் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள், திங்கட் கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/– சி.ப. முல்லை வாணன்.
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கபட்ட சாட்சிகள்.**

| வ.எண். | சாட்சிகள் | பெயர் |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு.Dr. தேன்மொழி |
| 2 | அ.சா.2 | திரு.Dr.மெய்யநாதன் |
| 3 | அ.சா.3 | திருமதி.ஜெயந்தி |
| 4 | அ.சா.4 | திரு.ஜானகிராமன் |
| 5 | அ.சா.5 | திரு.மோசஸ் |
| 6 | அ.சா.6 | திரு.லஷ்மி நாராயணன் |
| 7 | அ.சா.7 | திரு.சந்திரசேகரன் (காவல் உதவி ஆணையாளர் ஓய்வு) |

**2. அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்.**

| வ.எண் | சான்றாவணங்கள் | தேதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 28.07.2015 | புகார் |
| 2 | அ.சா.ஆ.2 | 28.07.2015 | கடிதம் |
| 3 | அ.சா.ஆ.3 | 28.07.2015 | திருமண அழைப்பிதழ் |
| 4 | அ.சா.ஆ.4 | 25.06.2025 | முதல் தகவல் அறிக்கை |

**3) அரசுதரப்பு சான்றுபொருட்கள் – இல்லை**

4) எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் – இல்லை.

5. குறிப்பு.

1. எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

2. எதிரி விசாரணைக் காலத்தில் பிணையில் இருந்து வருகிறார்.

3. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

---

Sd/– சி.ப. முல்லை வாணன்.
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

// உண்மை நகல் //

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிபதி,
பல்லாவரம்.

In the Court of DM cum JM at Pallavaram.
C.C. 698/2023
Dated: 23.03.2026
Jegannath, S/o. Jayapal.

**Judgment Pronounced.**

Accused present. . Heard both sides. Records perused. Judgment pronouned. In result, this court finds that the prosecution has not proved the guilt of the accused for the offences Charges against 507 and 506(ii) of IPC beyond all reasonable doubt and the accused is entitled for the benefit of doubt and the accused found not guilty for the offences Charges against accused for the offences Charges against 507 and 506(ii) of IPC and the accused is acquitted from the above charges as per section 248(1) of Cr.P.C and the accused is set at liberty. The bail bond of the accused shall be in force until the expiry of appeal period and the same shall stands cancelled after the expiry of appeal period. No case properties were remanded in the above case.

Detailed Judgment vide separate sheet.

**District Munsif- cum-**
**Judicial Magistrate,**
**Pallavaram.**